©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 345A] சென்னை, வியாழக்கிழமை, நவம்பர் 11, 2010
ஐப்பசி 25, திருவள்ளுவர் ஆண்டு — 2041

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

*பக்கங்கள்.*

**சட்டமுன்வடிவுகள்:**

எண் 37/2010—தமிழ்நாடு பல்கலைக் கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. 2–4

எண் 38/2010—தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்தச் சட்டம் .. .. .. 5–6

எண் 39/2010—தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (தனி வகைமுறை) சட்டம் .. 7–8

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010**

**குறித்த சில பல்கலைக்கழகச் சட்டங்களைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:

**பகுதி—I**

**முன்னுரை**

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19—ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி—II**

**2010—ஆம் ஆண்டு சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.**

53-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** 2010—ஆம் ஆண்டு சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 53—ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது: தமிழ்நாடு சட்டம் 26/2010.

“**53—A. உறுப்பமைக் கல்லூரிகளை மாற்றுதல்.—**(1) குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், திண்டிவனம், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தால் அமைக்கப்பட்டு பேணிவரப்படும் கல்லூரிகள், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்பமைக் கல்லூரிகளாக இருப்பது அற்றுப்போதல் வேண்டும்; அவை சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் உறுப்பமைக் கல்லூரிகளாக ஆதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில், 53—ஆம் பிரிவின் (3)—ஆம் உட்பிரிவின்படி நடைமுறையில் தொடர்ந்து இருக்கிற அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலை விதிகளில், துணைமுறை விதிகளில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், (1)—ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பமைக் கல்லூரிகளில், குறிக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பாக மாணவர் ஒருவராய் இருந்த அல்லது சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் எதனையும் எழுதுவதற்குத் தகுதியுடையவராய் இருந்த நபர் ஒவ்வொருவரும் சென்னை அண்ணா பல்கலைக்கழத்தில் தனது குறித்த காலப் படிப்பினை நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகமானது, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் குறித்த கால படிப்பிற்கு இணங்க, சென்னை அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவுக்கும் அத்தகைய முறையிலும் அத்தகைய மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய மாணவர்கள், அத்தகைய கால அளவின்போது, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். மேலும் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தால், அத்தகைய தேர்வுகளின் முடிவுகளின் பேரில், தகுதி பெற்ற மாணவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் நேரிணையான பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்”.

**பகுதி—III**

**2010—ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.**

53-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**3.** 2010—ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 53—ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,— தமிழ்நாடு சட்டம் 27/2010.

“**53—A, உறுப்பமைக் கல்லூரிகளை மாற்றுதல்.—**(1) குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தால் அமைக்கப்பட்டு பேணிவரப்படும் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளி

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் உறுப்பமைக் கல்லூரிகளாக இருப்பது அற்றுப்போதல் வேண்டும்; அவை மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் உறுப்பமைக் கல்லூரிகளாக ஆதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில், 53–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி நடைமுறையில் தொடர்ந்து இருக்கிற அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலை விதிகளில், துணைமுறை விதிகளில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பமைக் கல்லூரிகளில், குறிக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பாக மாணவர் ஒருவராய் இருந்த அல்லது திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் எதனையும் எழுதுவதற்குத் தகுதியுடையவராய் இருந்த நபர் ஒவ்வொருவரும் திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் தனது குறித்த காலப் படிப்பினை நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகமானது, திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் குறித்த கால படிப்பிற்கு இணங்க, மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவுக்கும் அத்தகைய முறையிலும் அத்தகைய மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல், கற்பித்தல் மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய மாணவர்கள், அத்தகைய கால அளவின்போது, திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். மேலும் திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தால், அத்தகைய தேர்வுகளின் முடிவுகளின் பேரில், தகுதி பெற்ற மாணவர்களுக்கு, திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் நேரிணையான பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்''.

**நோக்க—காரண விளக்கவுரை**

சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகமும் மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டதன் விளைவாக, அரசானது திண்டிவனம், விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள உறுப்பமைக் கல்லூரிகளை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றியமைத்தும், திண்டுக்கல் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள உறுப்பமைக் கல்லூரிகளை திருச்சிராப்பள்ளி அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்திலிருந்து மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றியமைத்தும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

2. அதற்கிணங்கிய வகையில், 2010—ஆம் ஆண்டு சென்னை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 26/2010) 2010—ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 27/2010) திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2010**

**2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்ட முன் வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25—ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 20/2010.

2—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் 2—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில் (b) எனும் கூறில் "2007—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாக வரிக் கணிப்பு செய்யப்பட்டிருக்கிற" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "2010—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாக 2006—2007 என்பதான வரிக் கணிப்பு ஆண்டு வரையில், வரிக் கணிப்பு செய்யப்பட்டிருக்கிற" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

4—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 4—ஆம் பிரிவில், "2007—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாக, தொடர்புடைய சட்டத்தின்படி" என்று வருகின்ற சொற்றொடருக்கு பதிலாக "2010—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாக 2006—2007 என்பதான வரிக் கணிப்பு ஆண்டு வரையில், தொடர்புடைய சட்டத்தின்படி" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2010.

நீக்கமும் காப்பும்.

4. (1) 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்த அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

2007—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாக வரிக் கணிப்பு செய்யப்பட்டிருக்கிற, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மைய விற்பனை வரிச் சட்டம், தொடர்புடைய சட்டங்கள் ஆகியவற்றின்படியான வரி, தண்டத்தொகை, வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான திட்டம் ஒன்றை வழங்குவதன் பொருட்டு, 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 20/2010) இயற்றப்பட்டது. சில வணிகர்கள், இந்த சட்டமானது, வரிக் கணிப்பானது 31—03—2007 என்பதான அறுதி செய்யப்பட்ட நாளுக்கு பின்னர் முடிவு செய்யப்பட்டன என்ற போதிலும் 2006—2007 என்பதான ஆண்டு வரையிலான வரிக் கணிப்பு ஆண்டுகள் தொடர்பாக உள்ள அனைத்து நிலுவைகளுக்கும் பொருந்துவதாகச் செய்யலாம் என அரசிடம் தற்போது முறையீடு செய்துள்ளனர். இந்த முறையீடுகளையும், 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டமானது 01—01—2007—எனும் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது எனும் பொருட்பாட்டையும் கருத்திற்கொண்டு, பழைய நிலுவைகளை மேலும் புதிய வரி அமைப்பு முறைக்குக் கொண்டு வருவதானது துறைக்குச் சுமையைச் சுமத்துவதாக இருப்பது மட்டுமல்லாமல், மேற்சொன்ன நிலுவைகளைக் குறித்த விவரங்களைப் பேணிவருவதும் அந்த நிலுவைகளை வசூலிப்பதும் பண வகையில் பயனுள்ளதாக அமையாது எனவும் கருதப்படுகிறது. எனவே, அரசானது 2010—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1—ஆம் நாளுக்கு முன்னதாகச் செய்யப்பட்டுள்ள வரிக் கணிப்புகளைப் பொறுத்த அளவில், 2006—2007 என்பதற்கான வரிக் கணிப்பு ஆண்டு வரையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மைய விற்பனை வரிச் சட்டம், தொடர்புடைய சட்டங்கள் ஆகியவற்றின்படியான வரி, தண்டத்தொகை, வட்டித்தொகை, நிலுவைகளைத் தீர்வு செய்யும் பயனை நீட்டிக்கும் பொருட்டு, 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 20/2010) திருத்துவது என முடிவு செய்துள்ளது.

2. அதற்கிணங்கிய வகையில் 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2010) 2010—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது 2010—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2010—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2010**

**2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் வகைமுறையை ஒரு முன் தேதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டம் என வழங்கப்பெறும்.

தமிழ்நாடு சட்டம் 22/2010.

22/2010 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 2—ஆம் பிரிவானது 2007—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1—ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் எனல்.

2. (இதன் பின்பு இதில் 2010—ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் 1—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவிலும், 2010—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழ்*** சிறப்பிதழின் பகுதி II—2—ஆம் பிரிவில் 1—ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(2)/CTR/527/(b)/2010 எனும் எண்ணிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் மாநில அரசின் அறிவிக்கையிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2010—ஆம் ஆண்டுச் சட்டத்தின் 2—ஆம் பிரிவானது 2007—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2010.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (தனி வகைமுறை) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருகின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

அரசின் வருவாயைப் பாதுகாக்கும் பொருட்டு, பதிவுப் பெற்ற வணிகர் ஒருவரால் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் விலையைவிடக் குறைவானதொரு விலையில் பொருள்களை அவ்வணிகர் விற்பனை செய்திருக்கிறவிடத்து, அந்த பொருள்களின் விற்றுமுதல் வரியை விட அதிகமாக இருக்கிற தொகை அளவிற்கு அப்பொருள்களின் உள்ளீட்டு வரி வரவுத் தொகையை எதிர்மாற்றம் செய்வதற்கு வகை செய்து 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 19—ஆம் பிரிவானது 22/2010 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தினால் தக்கவாறு திருத்தப்பட்டுள்ளது; மற்றும் மேற்சொன்ன திருத்தத்திற்கு 2010—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19—ஆம் நாளிலிருந்து செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. அரசானது, 32/2006 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து மாநில அரசின் கருவூலத்திற்கு ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு, அச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 2007—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1—ஆம் நாள் முதற்கொண்டே மேற்சொன்ன திருத்தத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதென தற்போது முடிவு செய்துள்ளது.

3. அதற்கிணங்கிய வகையில் 2010—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (தனி வகைமுறை) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2010) 2010—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது 2010—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

4. இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு பதிலாக அமைய விழைகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.